சரியான விடை மதுரை (மா) முதல் பருவத்தேர்வு ஆக-2018

1. (ஆ) மதுரை
2. (இ) சிறப்புத் தொழில்
3. (ஈ) விநியோகச் சேவை
4. (அ) தனியாள் வணிகம்
5. (அ) விருப்பமுறிக் கூட்டாண்மை
6. (ஈ) பங்குதாரர்கள்
7. (ஆ) சேவை
8. (இ) தலைமையகம்
9. (இ) 51%
10. (ஆ) கூட்டுறவுச் சங்கம்

ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி 4X2=8

11. பன்னாட்டு நிறுவனம் - இலக்கணம் பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டநாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்.**நைல். H. ஜே கோபி**

எ.கா:(ஏதேனும் 2) பாட்டா, கோல்கேட் பாமலிவ், சோனி கார்ப்பரேசன், சுசூகி, டைமெக்ஸ் வாடச், மைக்ரோமக்ஸ் இன்பர்மேடடிக்ஸ், ஹீரோ மோட்டார்ஸ் கார்ப்பரேசன், பஜாஜ், பிரிட்டானியா, டிவிஎஸ், டாட்டா, இனபோசிஸ்

12. பொருளாதார நடவடிக்கைகள்: இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். **எ.கா:(ஏதேனும் 2)** 1. தயாரிப்பாளர்களால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது 2. வியாபாரிகளால் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவது 3. சில்லறை வியாபாரிகளால் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது 4. மருத்துவர்களால் வழங்கப்படும் மருத்துவ ஆலோசனைகள் 5. பட்டயக் கணக்காளர்களால் வழங்கும் கணக்கியல் சேவைகள்

13.இராக்டேல் முன்னோடிகள்:
முதலில் கூட்டுறவு இயக்கம் 1844 ஆம் ஆண்டு ராபர்ட்ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது . இங்கிலாந்தில் 28 நெசவாளர் உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவு சமுதாயத்தை உருவாக்கி “ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி” என்று அவர் அழைத்தார்.

14. தனி வணிகரின் வாழ்வு
தனியாள் வணிகத்திற்கு நீடித்த வாழ்வு கிடையாது தனியாள் வணிக உரிமையாளரின் இறப்பு அல்லது வியாபாரம் செய்யும் திறனை இழத்தல் போன்றவைகளை பொறுத்தாகும். இவையே அவருடைய வணிகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம்.

15.உழையா கூட்டாளி: இத்தகைய கூட்டாளி மூலதனத்தை வழங்குவதோடு நிறுவனத்தின் இலாப நட்டத்தில் மட்டுமே பங்கேற்று வியாபாரத்தின் மேலாண்மையில் பங்கேற்காமல் இருப்பர். வெளியாட்களுக்கு அவர் கூட்டாளி போன்று தோன்றாமலும் கூட்டாளிகளின் வரையறாப் பொறுப்பிற்கு அவரும் ஒரு பங்கேற்பாளராகும்.

16. சட்டமுறை நிறுமங்கள் நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச் சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள் சட்டமுறை நிறுமங்கள் எனக் கூறப்படுகின்றன. உதாரணமாக இந்திய உணவுக் கழகம், ஆயுள்காப்பீட்டுக் கழகம், பொதுக்காப்பீட்டு நிறுவனம், இந்திய ரிசர்வ்வங்கி, பாரத ஸ்டேட்வங்கி, ரயில்வேத்துறை, மின்சாரக் கழகம், சட்டபூர்வ நிறுவனங்கள் போன்ற தன்னாட்சி நிறுவனங்கள்

ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி : 4X3=12

17.வரையறாப் பொறுப்பு: தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும். எனவே அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம்.

18. பாண்டியர்கள் ஆட்சிக் காலத்தில் பொருட்கள் விற்குமிடம்: 1.அங்காடி: பல பொருள்கள் விற்குமிடம் அங்காடி என அழைக்கப்பட்டுள்ளது. **2.நாளங்காடி:** பகலில் வியாபாரம் நடப்பதை நாளங்காடி எனவும் அழைப்பர் **3.அல்லங்காடி:** இரவில் வியாபாரம் நடப்பதை அல்லங்காடி எனவும் அழைப்பர்

19. வணிகத்தின் உறுதுணைகள் ஏதேனும் 2:
i. வியாபாரம் வணிகம் என்ற சொல் வாங்குதல் மற்றும் விற்றல் செயல்களை உள்ளடக்கியதாகும். மேலும் இச்சொல் உற்பத்தி செய்யபட்ட பொருட்களை இறுதி நிலை நுகர்வோருக்கு கொண்டு சேர்க்கும் செயலையும் உள்ளடக்குகிறது. **ii. போக்குவரத்து** உற்பத்தி செய்த பொருட்களை உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்துயும் விற்பது அரிது. அவற்றை நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களுக்கு சென்று சேர்க்க வேண்டிய பணியை போக்குவரத்து செய்கிறது. **iii. வங்கியியல்** வங்கிகளின் உதவியின்றி எந்த தொழில் அமைப்பும் இயங்க முடியாத அளவிற்கு வங்கிச் சேவை மகத்துவம் பெற்று விளங்குகிறது. வங்கிகள் தொழில் அமைப்புகளிடம் உள்ள பணத்தை வைப்புகளாக பெறுவதுடன் தொழில் அமைப்புகட்கு தேவைப்படும் நிதியை பல்வேறு கடன் திட்டங்கள் மூலம் கிடைக்க வகை செய்கிறது. **iv. காப்பீடு** வியாபாரம் நடத்துவது என்பது முழுக்க முழுக்க இடர்பாடு செறிந்த செயலாகும். வியாபார நிறுமங்கள் இடர் என்ற கடலில் எப்போதும் நீந்திச் செல்லும் கப்பல்கள் ஆகும். **v. பண்டகக் காப்பு**
சாதாரணமாக, பொருட்கள் யாவும் உற்பத்தி செய்யப்பட்ட உடனே விற்கப்படுவதில்லை மற்றும் நுகரப்படுவதுமில்லை. பொருட்கள் தேவைப்படும் நேரத்தில் அவை கிடைப்பதற்கு ஏற்றவாறு இருப்பு வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

20. தொழில் நடவடிக்கைகளின் வகைகள்
1. தொழில் அளவு அடிப்படையில் அ. சிற்றளவு தொழில்கள் ஆ. பேரளவு தொழில்கள்
2. உரிமை அடிப்படையில் அ. தனியார் நிறுவனங்கள் ஆ. பொது நிறுவனங்கள் இ. இணை நிறுவனங்கள்
3. பணிகள் அடிப்படையில் அ. உற்பத்தித் தொழில் ஆ. வணிகம்

21. இந்து கூட்டுக்குடும்ப வியாபாரத்தின் பண்புகள் (ஏதேனும் 3)

i. இந்துச் சட்டத்தின் படி கட்டுப்படுத்துதல் இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் இந்து சட்டத்தின்படி கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்:
(i) தயாபாகா மற்றும் (ii) மிட்டாக்சரா

ii. மேலாண்மை இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று அழைக்கப்படுகிறார். அக் குடும்பத்தில் கர்த்தாவே மூத்த ஆண் நபராவார். அக் குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள். கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர். ஆனால் கர்த்தாவின் அனுமதி பெற்றே குடும்ப உறுப்பினர்கள் வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்யலாம்.

iii. பிறப்பால் உறுப்பினர்: இக்குடும்பத்தில் உறுப்பினராக வேண்டும் என்றால் அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும்.

iv. பொறுப்பு: கர்த்தாவைத் தவிர மற்ற குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு என்பது வியாபாரத்தில் அவருக்குள்ள பங்கின் அளவுக்கு வரையறுக்கப்பட்டது. கர்த்தா மட்டுமே அவ்வியாபாரத்தில் பொறுப்பாளராக ஆக்க இயலாது. எனினும் கடனீந்தோருக்கு கர்த்தாவின் தனிச்சொத்தை கைப்பற்ற உரிமையுண்டு.

v. நீடித்த வாழ்வு குடும்ப உறுப்பினரின் மரணம், நொடிப்பு நிலை, மனச் சமநிலை, இழப்பு ஆகியவை வியாபாரத்தை பாதிக்காது. அவ்வியாபாரம் தொடர்ந்து மற்ற குடும்ப உறுப்பினர்களால் நடைபெறும்.

vi. கர்த்தாவின் உட்கிடை அதிகாரம் வியாபாரத்தின் நலனிற்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபார காரணங்களுக்காக வியாபார சொத்துக்களை அடமானம் வைத்தல் போன்றவற்றை செய்யும் உட்கிடையான அதிகாரம் கர்த்தாவிற்கு மட்டுமே உண்டு.

vii. இளவர் கூட்டாளி கூட்டாண்மையில் கூட்டாண்மையின் நலனிற்காகவும், இளவரின் நலனிற்காகவும் மட்டுமே கூட்டாளியாக முடியும். ஆனால் இந்து கூடுக்குடும்பத்தில் பிறந்த குழந்தையும் ஒரு கூட்டாளி ஆகலாம்.

viii. கலைப்பு: இந்து கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினர்கள் அனைவரின் விருப்பத்தின் பேரில் வியாபாரத்தை கலைக்கலாம். எந்த ஒரு தனி உறுப்பினரும் கூட்டாண்மையை கலைக்க இயலாது.

22. தயாரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம்: உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகிறது. உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அவரவர் இருப்பிடத்தில் உற்பத்தி செய்து முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம். இவ்வகை உற்பத்தி சங்கங்கள் செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாக திரட்டி ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன. கூட்டுறவு நெசவாளர்கள்சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவு சங்கம் போன்ற சங்கங்கள் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கு உதாரணமாக விளங்குகின்றன.

அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15

23.அ வணிகத்தின் தடைகள் 1. ஆள்சார் தடை பொருள்கள் தேவைப்படும் நபர்களையும் நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். உற்பத்தியின் அளவு அதிகரிக்க நுகர்வோரை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

2. இடத் தடை பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ரயில், விமானம், கடல் மற்றும் நில போக்குவரத்து போன்றவை நுகர்வோர்களுக்கு பொருட்களை கொண்டு செல்லமுக்கிய போக்குவரத்தாக இருக்கிறது.

3.காலத் தடை நுகர்வுத் தேவைப்படும் பொழுதும் வாங்கவிரும்பும் பொழுதும் பொருட்கள் கிடைக்க வேண்டும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்யப்படுவதும் நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்டகாலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். எனவே பொருட்களைப் பண்டகக் காப்பகங்களில் சேகரித்துக் வைத்துக் கொள்வதன் மூலம் நுகர் பொருள் தொடர்ந்து கிடைக்கவழி ஏற்படும்.

4. இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத் தடை: பொருட்கள்முறையானசிப்பம் கட்டுதல் மற்றும் நவீனகுளிர்சாதனவசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள், ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

5. இடர்பாட்டுத் தடை போக்குவரத்துக் கட்டுமம் உள்ளிட்டவைகள் மூலம் சரக்குகள் கொண்டு சென்றாலும், ஆட்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்கமுடிவதில்லை, இந்நட்டத்தைஈடுகட்டக் காப்பீடு செய்யப்படுகிறது. தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு ஆகியவற்றின் வழியாக நட்டத்தைப் சரிக்கட்டமுடியும்.

6. அறிவுசார் தடை சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய் விடக்கூடும். இத்தடைக்கு அறிவுசார் தடை என்கிறோம். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் அத்தடையை நீக்கலாம்.

7. பண்டப் பரிமாற்றத் தடை பணம் பண்டப் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை

செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவையையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

8. நிதித் தடை உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நிதியை வணிக ரீதியாக செயல்படுத்துவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் நிதி உதவுகிறது.

9.பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பதில் தடை: ஆராய்ச்சிகளின் மூலம் நுகர்வோரின் தேவையை அறிந்து அவர்களுக்கு தரமான பொருட்களை வழங்க முடிகிறது.

10.பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல் மின்னணு வணிகம் மூலம் பொருட்களை வீட்டிலிருந்தே வாங்கல் ஆணை பிறப்பிக்கலாம். பொருட்களை பெற்றுக்கொண்ட பின் அதற்குண்டான தொகையினை செலுத்தலாம்.

23.ஆ. பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள்:

1. குறைந்தபட்சக் கூலி: பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்தபட்சக் கூலி வழங்கும் நாடுகளில் தனது நிறுவனங்களை அமைப்பதால் குறைந்த செலவில் பொருட்களையும் சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால் தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது. சிறிய நிறுவனங்கள் குறிப்பிட்ட வட்டார அளவில் மட்டுமேசெயல்பட்டு வருவதால் அவர்களால் சிக்கனமாகப் பொருட்களை வழங்க முடிதில்லை.

2. தரமான பொருட்கள்: பன்னாட்டு நிறுவனங்களின் வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் இந்நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காகச் தாராளமாக செலவிட்டுத் தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்தசெலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

3. பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் : தனது சிறப்புத் தொழில் நுட்பஅறிவைப் பயன்படுத்திப் பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தாமல் இருக்க மனித வளங்களையும் மற்றும் பயனற்ற சொத்துகளையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

4. நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி: பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால் நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.

5. தொழில் நுட்ப வளர்ச்சி: பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் தொழில் நுட்ப வளர்ச்சியை ஒரு நாட்டிலிருந்து வேறு ஒரு நாட்டிற்கு மாற்றுவதன் மூலம் வளரும் நாடுகளில் தொழில் நுட்ப வளர்ச்சியின் பலனை உணர வைக்கின்றனர்.

6. மேலாண்மை வளர்ச்சி: நிறுவனங்கள் மேலாண்மைத் திறமையைப் பயன்படுத்துகின்றன. மேலாண்மைத் திறமையைக் கருத்தாகவும் செயலாகவும் ஆக்குகின்றன. இந்நிறுவனங்கள் நாட்டின் மேலாண்மை முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றன.

7. சர்வாதீனத்தைக் கட்டுப்படுத்துகின்றன: பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டில் போட்டியைத் தூண்டுகின்றன. உள்ளூர் சர்வாதீனத்தைக் கட்டுப்படுத்திப் பொருட்களைச் சிறப்பாக வடிவமைத்து விலை குறைப்பிற்கும், குறைவான விலையில் பொருளை வழங்கவும் வழி வகுக்கின்றன. இதனால் உள்ளூர் நிறுவனங்கள் தனது பொருட்களைத் திறமையாகவும், தரமாகவும் தயாரிக்க உந்தப்படுகிறார்கள். அனேக இந்திய நிறுவனங்கள் ISO - 9000 தரச்சான்றிதழைப் பெற்றதனால் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஈடாகப் போட்டியிட்டு வருகின்றன.

8. வாழ்க்கைத் தரம் உயர்கின்றது : பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

9.சர்வதேச சகோதரத்துவத்தையும் கலாச்சாரத்தையும் காக்கிறது : உலகப் பொருளாதாரத்தை ஒருங்கிணைத்து செயல்பட இந்நிறுவனங்கள் உதவுகிறது. பன்னாட்டு நல்லுறவையும் கலாச்சாரத்தையும் பேணிகாப்பதால் உலகெங்கும் அமைதியும் சகோதரத்துவமும் செழுமையும் நிலவ வழிவகுக்கிறது.

24.அ. தொழில்	சிறப்புத் தொழில்	வேலைவாய்ப்பு
1.உருவாக்கும் முறை தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள், பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டது.	சிறப்புத் தொழில் அமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல்.	சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம்.
2. பணியின் தன்மை சரக்கு மற்றும் சேவையை பொது மக்களுக்கு அளித்தல்.	சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல்.	பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல்.
3. தகுதி குறைந்தபட்ச தகுதி என்று ஏதுமில்லை.	குறிப்பிட்டபிரிவில் சிறப்பு தகுதியும் / பயிற்சியும் பெறுதல்.	குறைந்தபட்ச தகுதி தேவையில்லை.
4. அடிப்படை நோக்கம் சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து இலாபம் ஈட்டுதல்.	சேவைபுரிதல்	முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன் கூலி / சம்பளம் பெறுதல்
5. மூலதனம் நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதனஅளவு மாறும்.	இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும்.	மூலதனம் ஏதும் தேவையில்லை.
6. வெகுமதி இலாபம்	தொழில் முறை கட்டணம்	கூலி / சம்பளம்
7. இடர் இலாபம் நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும்.	கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது	நிலையான கூலி / சம்பளம் இடர் எதுமில்லை
8. உரிமை மாற்றம் சில நடைமுறைகளை பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும்	உரிமைமாற்றம் செய்ய இயலாது.	உரிமை மாற்றம் செய்ய முடியாது.
9. நெறிமுறை குறிப்பிட்ட நடத்தை விதிகள் ஏதும் இல்லை ஆனால்	சிறப்புத் தொழில் சார்ந்த நடத்தை நெறிகள்	பணியாளர் நிறுவனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைக்கு

நன்நெறி அடிப்படையில் தொழில் நடத்தப்பட வேண்டும்.	பின்பற்ற வேண்டும்.	உடன்பட்டு நடந்து கொள்ள வேண்டும்.

24.ஆ நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு

i. கூட்டாளிகளின் உடன்பாட்டால் ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது, கலைக்கப்படுகிறது. அனைத்துக் கூட்டாளிகளும் ஒன்று சேர்ந்து அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம். **ii. ஒருவர் தவிர அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை.** ஏதாவது ஒருவர் நொடிப்புநிலை அடைந்தாலோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தாலோ நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

iii. சட்டத்திற்கு புறம்பான செயலால்
கூட்டாண்மை நிறுவனத்தில் சட்டத்திற்கு புறம்பாக தொழிலில் ஈடுபட்டிருந்தால் தானாகவே நிறுவனம் கலைக்கப்படலாம்.

iv. விருப்புமுறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஏதாவது ஒரு கூட்டாளி கடிதம் மூலம் அனைத்துக் கூட்டாளிகளுக்கும் தனது விருப்பமான கலைப்பை தெரிவித்தால் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

v. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு
கூட்டாண்மைக் கலைப்பு நிறுவனக் கலைப்புடன் தொடர்புடையது. மற்ற கூட்டாளிகள் தொடர்ந்து நடத்தினாலேயொழிய நிறுவனக்கலைப்பு ஏற்படாமல் இருக்கலாம்.i. குறிப்பிட்டகாலத்திற்கான கூட்டாண்மையின் அக்காலம் முடிவடைந்தவுடன் அதாவது நிலையான காலக் கூட்டணியாக இருந்தால் ii. குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே தொடங்கப்பட்டிருப்பின் தொழில்கள் நிறைவு பெற்றவுடன் அதாவது குறிப்பிட்ட கூட்டாண்மையாக இருந்தால் iii. கூட்டாளி இறந்து விட்டால் iv. கூட்டாளி விலகும் பொழுது v. கூட்டாளி நொடிப்பு நிலை அடையும் போது மேற்காணும் அனைத்து சூழ்நிலைகளிலும் அனைத்து கூட்டாளிகளாலும் தொடர்ந்து கூட்டாண்மையை நடத்த இயலாமல் தானாகவே நிறுவனக்கலைப்பு ஏற்படும்.

25.அ அமைப்பு முறை ஏடு என்பது ஒரு கூட்டு பங்கு நிறுமம் முறையாக அமைக்கப்பட்டதைச் சான்று பகரும் ஓர் ஆவணமாகும்.

அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கம் (ஏதேனும்4)

1. பெயர் குறித்த உட்பிரிவு பெயர் குறித்த உட்பிரிவில் ஒரு நிறுவனத்திற்குச் சட்டப்பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால் நிறுமத்தின் பெயருடன் "வரையறுக்கப்பட்டது." என்ற வார்த்தையைச் சேர்க்கவேண்டும். **2. இடங்குறித்த உட்பிரிவு** இப்பிரிவு நிறுமத்தின் பதிவு அலுவலகம் எங்கு அமைந்துள்ளது என்பது பற்றித் தெரிவிக்கிறது. தகவல் தொடர்பிற்காக நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தையும் மற்றும் பதிவேடுகள் எங்கு வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் தெரிவிக்கிறது, தொழில் தொடங்குவதற்கு முன்பே நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்கவேண்டும்.

3. நோக்கம் குறித்த உட்பிரிவு இப்பிரிவு நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். பங்குதாரர்களின் தேவைகளையும் மற்றும் நிதி ஆதாரத்தையும் பயன்படுத்துவது குறித்தும் இதில் விவரங்கள் இருக்கும். நிறுமத்தின் துணை நோக்கங்கள் மூலம் நிறுமத்தின் முக்கிய நோக்கங்களை அடையத் தேவையான வழிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். நோக்கங்கள் நிறுமங்கள் சட்டத்தை மீறியோ அல்லது பொது நலத்திற்கு எதிராகவும் இருக்கக் கூடாது.

4. பொறுப்புக் குறித்தப் உட்பிரிவு பொறுப்புக் குறித்த உட்பிரிவு என்பது பொறுப்புறுதி நிறுமமாயின் அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் பொது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வோர் உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும் இதே பொறுப்புறுதி நிறுமத்தின் பங்குதாரர்களின் பொறுப்பு என்பது பங்குகளை வைத்துள்ள அளவும் கலைப்பின் பொழுது தருகின்ற தொகை மற்றும் கலைப்புச் செலவும் அடங்கும்.

5. முதல் குறித்த உட்பிரிவு முதல் பிரிவு என்பது நிறுமத்தின் அங்கிகரிக்கப் பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்தப்பட்ச மதிப்பு) ஆகியவை பற்றி விவரிக்கிறது. நிறுமத்தின் சொத்துகள் பற்றியும் இப்பிரிவு குறிப்பிடுகிறது.

6. அமைப்பு உட்பிரிவு பங்குதாரர்கள் தாங்கள் ஒன்றினைந்து நிறுமமாக செயல்பட விரும்பும் தங்களின் விருப்பத்தை இப்பிரிவு வெளிப்படுத்துகிறது. பொது நிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்துயிடவேண்டும்.

25.ஆ. செயலின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்களின் வகைகளை விவரி

I. நடவடிக்கைகள் அடிப்படையில்

அ. முதன்மை உற்பத்தித் தொழில்கள்

ஆ. இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில்கள்

இ. சேவைத் தொழில்கள்

அ. முதன்மை உற்பத்தித் தொழில்கள்

முதன்மை உற்பத்தித் தொழில்கள் இயற்கையோடு தொடர்புடையவை. இது இரண்டு வகைப்படும்.

பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்: பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களைக் கொண்டது எடுத்துக்காட்டு: நிலக்கரி மற்றும் கச்சாஎண்ணை எடுத்தல் முதலியவை.

மரபுசார் உற்பத்தித் தொழில்கள் தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவன மரபுத் உற்பத்தித் தொழில்கள் எனப்படுகின்றன. எடுத்துக்காட்டு: கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு .

ஆ. இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில்கள்
இது இரண்டு பிரிவுகளை உள்ளடக்கியது.
1. தயாரிப்புத் தொழில்கள் 2. கட்டுமானத் தொழில்கள்

1. தயாரிப்புத் தொழில்கள் கச்சாப் பொருட்கள்அல்லது பகுதியாக முடிவு பெற்றப் பொருட்களைப் பயன்படுத்தப் கூடிய அளவில் முடிவுற்ற முழுப்பொருளாக மாற்றும் தொழில்களையே தயாரிப்புத் தொழில்கள் என்கிறோம். இவை கீழ்க்கண்ட நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.
1. பகுப்பாய்வு உற்பத்தி தொழில்
2. செயற்கை பொருள் உற்பத்தி தொழில்
3. தொடர் முறை உற்பத்தி தொழில்
4. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்கள்

1. பகுப்பாய்வு உற்பத்தி தொழில் : இத்தொழிற்சாலை ஒரு மூலப் பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரிப்பதை மேற்கொள்ளும் எடுத்துக்காட்டாக: எண்ணை சுத்திகரிக்கும் தொழிற்சாலையில் கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றைபிரித்தல்.

2. செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்கள்: பல்வேறு வகையான கூட்டுப் பொருட்களைச் ஒன்றாக சேர்த்துப் புதிதாக ஒரு பொருளை உருவாக்கும் தொழிற்சாலைகளையே செயற்கைத் தொழிற்சாலை எடுத்துக்காட்டு: பாலியஸ்ட், நைலான்,டெ.ஃலான்.

3. தொடர் முறை உற்பத்தித் தொழில்கள்: கச்சாப் பொருள் பல்வேறு படிநிலைகளைக் கடந்து இறுதியில் ஒரு முடிவுற்ற பொருளாக மாற்றுவது தெடர்முறை உற்பத்தித் தொழில் எனப்படுகிறது.
எடுத்துக்காட்டு: குளிர்பானம் தயாரித்தல், மருந்துகள் தயாரித்தல், வண்ணம் தயாரித்தல் போன்றவை.

4. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்கள் : இத்தொழிற்சாலையில் பல்வேறு முடிவுற்ற பொருட்கள் ஒன்றாக சேர்க்கப்பட்டு, ஒரு முற்றுப்பெற்ற பொருளாக மாற்றப்படுகிறது.
எடுத்துக்காட்டு: தொலைக்காட்சி, மகிழுந்து, கணினி.

2. கட்டுமானத் தொழில்கள் கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள்மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே, கட்டுமானத் தொழிற்சாலை இதில் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி திட்டமிடல் உண்டு.

இ. சேவைத் தொழில்கள் இத் தொழில்கள் இயல் பொருட்களை உற்பத்தி செய்வது இல்லை. மாறாக சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்கின்றன. இவ்வகை சேவை வியாபாரம் பல வகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன.
எடுத்துக்காட்டு: மருத்துவ கருவிகள் தயாரிப்பு தொழிற்சாலை, கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில், சுற்றுலாத் தொழில் வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களான வங்கியியல், காப்பீடு, பண்டகச்சாலை ஆகியவை இந்தச் சேவைத் தொழிற்சாலையின் உள்ளடங்கும்.
இவ்வகை தொழிற்சாலைகள் கீழ்வருமாறு வகைப்படுத்தபடுகிறது.
1. தனிச் சேவை
2. பொதுச் சேவை
3. விநியோகச் சேவை
4. நிதிச் சேவை
5. தனித்துவச் சேவைகள்
6. தனித்திறன்

1. தனிச்சேவை: தனி மனிதன் மற்றும் தனியார் பயிலகமும் அவர்களின் சேவையை மற்றவர்களுக்கு விற்பது தனிச் சேவையாகும்
எடுத்துக்காட்டு: குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீர்ச் செய்பவர், உணவகம், தனியார் பள்ளிகள், வீட்டு வேலையாட்கள்.

2. பொதுச் சேவை : அரசு மருத்துவமனை, பள்ளிகள், காவல் நிலையம் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் அரசுக்காக எந்த ஓர் இலாப நோக்கமும் இல்லாமல் சேவை புரிவதே பொதுச்சேவை.

3. விநியோகச் சேவை : போக்குவரத்து விற்பனை, பண்டகச்சாலை, பொருட்கள் ஏற்றிச்செல்லுதல், விற்பனையாளர்கள் முதலியன விநியோகச் சேவையில் அடங்கும்.

4. நிதிச்சேவை : வங்கியில், கணக்கீடு மற்றும் காப்பீடு ஆகியவை இதில் அடங்கும்.

5. தனித்துவச் சேவைகள்: சிறப்புத் தொழில், திறமை மற்றும் உயர் தொழில் நுட்பச் சேவை ஆகியன இச்சேவையின் கீழ் அளிக்கப்படுகிறது.
எடுத்துக்காட்டு: மென்பொருள் வளர்ச்சித் தணிக்கையியல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, மருத்துவ ஆலோசனை, பரஸ்பர நிதி மேலாணமைச் சேவை, வெளியாட்களிடம் பணி கொடுத்துச் செய்தல் (BPO).

6. தனித்திறன் : புதுப்புது எண்ணத்தை உருவாக்குதல், புது தொழில் நுட்பத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் புதுக்கொள்கைகளைக் குறிப்பிட்ட வல்லமையுடைய தனி நபரிடம் ஒப்படைத்தல் ஆகியவை இவற்றில் அடங்கும்.